

பெரம்பலூர் சட்டமன்றத் தொகுதி வாக்கு எண்ணிக்கை முகவர்கள் மற்றும் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில் நடைபெற்றது . இந்த கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா.எம்.பி.கலந்து கொண்டு ஆலோசனைகள் வழங்கினார். இந்த கூட்டத்தில் மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், தொகுதி பார்வையாளர் தங்க.சித்தார்த்தன், வேட்பாளர் டாக்டர் எஸ்.டி.ஜெயலெட்சுமி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




கும்பகோணம் வாணி விலாச சபாவின் சார்பில் இலக்கியத்திற்கான ஞானபீட விருது பெற்ற கவிப்பேரரசு வைரமுத்துவுக்கு நடைபெற்ற பாராட்டு விழாவில் கவிப்பேரரசு கவிஞர் வைரமுத்து ஏற்புரையாற்றினார். கவிஞரை பாராட்டி நற்றமிழ் நாயகர், தமிழ்நாடு அரசின் முன்னாள் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்கத்தின் இயக்குனர் மரு.ஜெய.ராஜமூர்த்தி பேசினார். உடன் சபா நிர்வாகிகள் சு. கல்யாணசுந்தரம் எம்.பி, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, துணை மேயர் சு.ப.தமிழழகன், கே.கே.எஸ்.ராஜா உள்ளிட்ட கும்பகோணம் பகுதியைச் சார்ந்த வணிகர்கள், பொதுமக்கள், இளைஞர்கள் பெருந்திரளாக கலந்துகொண்டனர்.

### 4,5 லிட்டர் விலக்கு: பிரத்யேக பயன்பாட்டிற்கான தமிழ்நாடு அரசாணை!

# புதுச்சேரி உள்ளிட்ட பிற மாநில மதுபானங்களுக்குப் பொருந்தாது!

## மாநில தலைமை அரசு குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகம்மது ஜின்னா வாதத்தை ஏற்று சென்னை உயர்நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு!

சென்னை, மே 3 - பிரத்யேக பயன்பாட்டிற்கான தமிழக அரசாணை 4.5 லிட்டர் விலக்கு - பாண்டிச்சேரி உள்ளிட்ட பிற மாநில மதுபானங்களுக்கு பொருந்தாது என மாநில தலைமை அரசு குற்ற வியல் வழக்குரைஞர் அசன் முகம்மது ஜின்னா வாதத்தை ஏற்று சென்னை உயர்நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு அளித்துள்ளது.

மீஞ்சூர் பகுதியைச் சேர்ந்த தமிழரசன் மற்றும் ராஜேஷ்குமார் ஆகியோர், சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், ஆந்திர மாநிலத்திலிருந்து 3.4 லிட்டர் மதுபானத்தை விற்பனைக்காக கொண்டு வந்ததாக, எளாவூர் சோதனைச் சாவடியில் கும்மிடிப்பூண்டி மது விலக்கு அமலாக்கப் பிரிவினர் தங்கள்மீது வழக்கு பதிவு செய்துள்ளனர். தமிழ்நாடு அரசாணையின் படி 4.5 லிட்டர் வரை மதுபானத்தை தனிப்பயன்பாட்டிற்காக வைத்திருக்கலாம் என்றும், தாங்கள் கொண்டு வந்த மதுபானம் தங்களின் சொந்த பயன்பாட்டிற்காகவே என்றும் எனவே இந்த வழக்கை ரத்து செய்ய வேண்டும் என கோரினர்.

இந்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம், முன்பாக புலன் விசாரணைக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டிருந்தது.

தமிழ்நாடு அரசின் மாநில தலைமை அரசு குற்றவி யல் வழக்குரைஞர் அசன் முகம்மது ஜின்னா அவர்களின் முறையீட்டின் பேரில், இந்த வழக்கு இறுதி விசாரணைக்காக நீதிபதி நிர்மல் குமார் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், மனுதாரர்கள் அனுமதிக்கப்பட்ட அரசாணையின் படி 3.4 லிட்டர் மட்டுமே கொண்டு வந்ததாகவும், நீதி மன்றத்தின் முன்தீர்ப்புகள் மற்றும் 4.5 லிட்டர் தனிப்பயன்பாட்டு விலக்கு அடிப்படையில் இந்த முதல் தகவல் அறிக்கையை (FIR) ரத்து செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**வழக்கிற்குப் பொருந்தாது! அசன் முகமது ஜின்னா வாதம்!**

அரசு தரப்பில் ஆஜரான மாநில தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகம்மது ஜின்னா அவர்கள், 4.5 லிட்டர் விலக்கு அரசாணை என்பது தமிழ்நாட்டில் விற்பனை செய்யப்படும் மதுபானங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றும், புதுச்சேரி, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட பிற மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்படும் மதுபானங்களுக்கு எந்த வகையிலும் பொருந்தாது என்றும் வாதிட்டார். இதற்கான விளக்கங்களை உள்துறை செயலாளர் ஏற்கனவே வழங்கியிருப்பதாகவும் குறிப்பிட்டார். மேலும், முந்தைய தீர்ப்புகள் இந்த அம்சத்தை கருத்தில் கொள்ளாமல் வழங்கப்பட்டதாகவும், அவை இவ்வழக்கிற்கு பொருந்தாது என்றும் தெரிவித்தார்.

அத்துடன், பாண்டிச்சேரியில் இருந்து தமிழ்நாட்டிற்கு 4.5 லிட்டர் வரை மதுபானம் கொண்டு வரலாம் என உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியதாக சமூக ஊடகங்களில் தவறாக பரவிய தகவல்களையும் சுட்டிக்காட்டினார்.

**சமூக ஊடகங்களில் தவறான தகவல்!**

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி நிர்மல் குமார் அவர்கள், 4.5 லிட்டர் தனிப்பயன்பாட்டு விலக்கு அரசாணை என்பது தமிழ்நாட்டில் சட்டபூர்வமாக விற்பனை செய்யப்படும் மதுபானங்களுக்கு மட்டுமே பொருந்தும் எனத் தீர்ப்பளித்து, மனுவை தள்ளுபடி செய்தார்.

இதன் மூலம், பாண்டிச்சேரி உள்ளிட்ட பிற மாநிலங்களில் இருந்து 4.5 லிட்டர் வரையிலான மதுபானங்களை கொண்டு வரலாம் என சமூக ஊடகங்களில் பரவிய தவறான தகவல்களுக்கு இந்த தீர்ப்பு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. மேலும், பிற மாநிலங்களிலிருந்து மதுபானங்களை கொண்டு வருவது சட்டப்படி குற்றமாகும் என்பதையும் இந்த தீர்ப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

### பீகாரில் ஒரே நாளில் வாக்குப்பதிவு வெளியான நிலையில்

# தமிழ்நாட்டில் இதுவரை இறுதி வாக்குப்பதிவு எண்ணிக்கை வெளியிடாதது ஏன்?

## அரசியல் கட்சியினர் சரமாரி கேள்வி! குளறுபடி இருந்தால் நீதிமன்றத்தை நாடுவோம் என அறைகூவல்!

சென்னை, மே. 3- கடந்தாண்டு பீகாரில் மட்டும் 24 மணி நேரத்தில் தேர்தல் வாக்குப்பதிவு வெளியான நிலையில் தமிழகத்தில் இதுவரை இறுதி வாக்குப்பதிவு விவரம் வெளியிடாதது ஏன் என அரசியல் கட்சியினர் இந்திய தேர்தல் ஆணையத்தை சரமாரியாக கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேலும் தரவுகளில் குளறுபடி இருந்தால் நீதி மன்றத்தை நாடுவோம் என அறைக்கூவல் விடுத்துள்ளனர். தமிழகத்தில் உள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளுக்கும் ஒரே கட்டமாக கடந்த ஏப்ரல் 23 அன்று தேர்தல் நடைபெற்றது.

4 முனைப்போட்டி நிலவிய இந்தத்தேர்தலில், காலை 7 மணிக்கு தொடங்கிய வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்ற நிலையில் மாலை 6 மணிக்கு நிறைவு பெற்றது. அன்றைய தினத்தின் இறுதியில் வாக்குப்பதிவு 85.15 சதவீதமாக இருந்தது. 2 நாட்களுக்கு பிறகு, மறுசரிபார்ப்பிற்கு பின் இந்த தற்காலிக சதவீதத்தை 85.10 சதவீதமாக (0.05% குறைவு) ஆணையம் திருத்தியது. அதே சமயம், பாலின வாரியான விவரங்களையோ (ஆண்கள், பெண்கள் மற்றும் மூன்றாம் பாலினத்தவர்) அல்லது மொத்த வாக்காளர்களின்எண்ணிக்கையையோ அதிகாரிகள் இன்னும் வெளியிடவில்லை.

பல ஆண்டுகளாக தேர்தல்களை சந்தித்து வரும் தி.மு.க மற்றும் அ.தி.மு.க ஆகிய இரு முக்கிய திராவிட கட்சிகளும், வாக்குச்சாவடி மற்றும் தொகுதி வாரியாக தங்களின் வெற்றி வாய்ப்புகளை கணிக்க படிவம் 17Cஐ பெற்றுள்ளன. ஆனால், சீமானின் நாம் தமிழர் கட்சி, புதிய கட்சிகளான விஜய்யின் தமிழக வெற்றி கழகம் உள்ளிட்ட புதிய கட்சிகள், திராவிடக் கட்சிகளின் இந்த அனுபவத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல், தபால் மற்றும் சேவை வாக்குகள் இல்லாத இறுதி அறிக்கைகளுக்காக இன்னும் காத்திருக்கின்றனர்.

இதனிடையே வாக்கு எண்ணிக்கை நடைபெறும் நாளன்றுதான் இறுதி அறிக்கை வெளியிடப்படும் என்று தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து மூத்த தேர்தல் அதிகாரி ஒருவர் கூறியதாவது: வாக்கு எண்ணிக்கை நடைபெறும் மே 4ம் தேதி காலை 8 மணி வரை நாங்கள் தபால் வாக்குகளைச் சேகரிப்போம். எனவே, அதுவரை முழுமையான அறிக்கையை வழங்க முடியாது. எங்கள் இணையதளத்தில் வாக்குப்பதிவு சதவீதத்தை புதுப்பித்துள்ளோம். 6 லட்சம் தபால் வாக்குகள் உள்ளதால், ஏதேனும் மாற்றம் இருந்தால் அது வெறும் 1 சதவீதம் என்ற அளவில் மிகக் குறைவாகவே இருக்கும் என்றார்.

2025 நவம்பரில் பீகாரில் வாக்குப்பதிவு நாளன்றே பாலின வாரியான விவரங்கள் உட்பட அனைத்துத் தரவுகளையும் எப்படி வெளியிட முடிந்தது என்று கேட்டபோது அந்த அதிகாரி கருத்து தெரிவிக்க மறுத்துவிட்டார். பீகாரில் நவம்பர் 6 மற்றும் 11 ஆகிய தேதிகளில் 2 கட்டங்களாகத் தேர்தல் நடைபெற்றது. 2 முறையுமே, வாக்குப்பதிவு நாளன்று இரவு 11 மணிக்குள் ஈவிஎம் வாக்கு எண்ணிக்கையை ஆணையம் வெளியிட்டது.

இது குறித்து திமுக அமைப்பு செயலாளர் ஆர்.எஸ். பாரதி கூறியதாவது:

‘சட்டமன்ற தேர்தலுக்கான முழுமையான தரவுகளை வழங்குமாறு அதிகாரிகளிடம் கேட்டு வருகிறோம். ஆனால், துல்லியத் தன்மையை உறுதிப்படுத்த எண்களை மறுசரிபார்ப்பு செய்வதாகக் கூறி அவர்கள் எங்களைத் தவிர்த்து வருகின்றனர். தரவுகளில் ஏதேனும் குளறுபடிகள் இருப்பின் நீதி மன்றத்தை அணுகுவோம்’

இவ்வாறு அவர் கூறினார்.


அதேபோல், அ.தி.மு.க. மூத்த நிர்வாகியும், எம்.பியுமான இன்பதுரை தெரிவித்ததாவது: “கட்சியின் வாக்குச் சாவடி முகவர்கள் அந்தந்தப் பகுதிகளில் தரவுகளை சேகரித்துள்ள போதிலும், முழுமையான அதிகாரப்பூர்வ புள்ளிவிவரங்கள் இன்னும் கிடைக்கவில்லை”

இவ்வாறு அவர் கூறினார்.

### தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க. – கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு

# தேர்தலில் பணியாற்றிய கழக நிர்வாகிகள் - கூட்டணி கட்சி நிர்வாகிகளுக்கு நன்றி!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. அறிக்கை!



தஞ்சாவூர், மே.3. தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட திருவிடைமருதூர், கும்பகோணம், பாபநாசம் சட்டமன்ற தொகுதிகளில் கழக வேட்பாளர்கள் மற்றும் கூட்டணி கட்சியின் வேட்பாளர் வெற்றிக்காக அரும்பாடு பட்டு வாக்கு சேகரித்த கழக நிர்வாகிகளுக்கும், கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகளுக்கும் நன்றி தெரிவித்து மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க. அன்பழகன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு : நடைபெற்று முடிந்த 2026 சட்டமன்ற பொது தேர்தலில் மாண்புமிகு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட கும்பகோணம் சட்டமன்ற தொகுதியில் நானும் (சாக்கோட்டை க.அன்பழகன்), திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதியில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் அவர்களும் உதயசூரியன் சின்னத்திலும், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் வேட்பாளராக ஏ.எம். ஷாஜகான் அவர்களும் போட்டியிட்டோம்.

மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர்களை வெற்றிப்பெற செய்து மக்கள் போற்றும் திராவிட மாடல் ஆட்சியின் 2.0 தொடர எங்களுக்காக வாக்கு சேகரித்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் மற்றும் கொளுத்தும் வெயிலை பொருட்படுத்தாமல், இரவு பகல் பாராமல் பிரச்சாரத்தில் ஈடுப்பட்ட தஞ்சை வடக்கு மாவட்டத்தை சேர்ந்த முன்னாள் - இந்நாள் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், மாவட்ட, மாநில கழக நிர்வாகிகளுக்கும், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்களுக்கும், மாநகர, ஒன்றிய, பகுதி , பேரூர், வார்டு மற்றும் கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகளுக்கும், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகளுக்கும், கழக பிரதிநிதிகளுக்கும், முன்னாள் - இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கும், கூட்டணி கட்களின் மாவட்ட தலைவர்கள், தொண்டர்கள், கழகத்தின் உடன்பிறப்புகள் அனைவருக்கும் என் மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ அறிக்கை வெளியிட்டுள்ளார்.

### முரசொலி விநியோகப் பிரிவு

# ஆர்.பழனி முதலாம் ஆண்டு நினைவு நாள்!



செங்கல்பட்டு, மே.3- முரசொலி விநியோகப் பிரிவில் பணியாற்றி வந்த ஆர்.பழனி வயது 38 (03.05.2025) சென்ற ஆண்டு மறைவெய்தினார். அதனை ஒட்டி இன்று (03.05.2026 - ஞாயிற்றுக் கிழமை) அவரது முதலாம் ஆண்டு நினைவு நாள் கடைப்பிடிக்கப்படுகிறது.

செங்கல்பட்டு மாவட்டம் வாலாஜாபாத் வட்டம் நெய்யாடுபாக்கம் கிராமத்தில் அவரது இல்லத்தில் உள்ள திருவுருவப் படத்திற்கு அன்னாரது குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் மலர் மாலை வைத்து நினைவஞ்சலி செலுத்துகின்றனர்.




கும்பகோணம் பரஸ்பர ஸகாய நிதி நிறுவனத்தில் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் சார்பில் மே தின கொடியை நிதியின் தலைவர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி ஏற்றி சிறப்புரையாற்றினார். உடன் நிதியின் மேலான் இயக்குனர் வேலப்பன், தொ.மு.ச. மாவட்ட அமைப்பாளர் மாடாக்குடி செல்வராஜ் மற்றும் பாரி, செந்தில் ஆறுமுகம் உள்ளிட்ட நிதியின் ஊழியர்கள் உள்ளனர்.




மே1 தொழிலாளர் தினத்தை முன்னிட்டு கோவை பெரியகடை பகுதி, உக்கடம் புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள கோவை மாவட்ட ஆட்டோ தொழிற்சங்கம் முன்பு கோவை மாநகர் மாவட்ட கழக பொறுப்பாளர், கோவை வடக்கு சட்டமன்ற தொகுதி கழக வேட்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வன் தொ.மு.ச. கொடியேற்றி வைத்து பொது மக்களுக்கு இனிப்புகளை வழங்கினார். இதில் மாநகர் மாவட்ட துணை செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், கல்பனா செந்தில், பகுதி கழக பொறுப்பாளர்கள் மார்க்கெட் மனோகரன் (பெரியகடை), ஏவி.பக்குருதின் (கோட்டைமேடு), தொழிலாளர் அணி மாநில துணை செயலாளர் தொ.மு.ச. நா.தமிழ்ச்செல்வன், வட்ட கழக செயலாளர்கள் கோபி, ரங்கராஜ், தினேஷ்குமார் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




மே1 உழைப்பாளர் தினத்தை முன்னிட்டு பொள்ளாச்சி நகர தி.மு.கழக அலுவலகத்தில் , பொள்ளாச்சி வடக்கு நகர கழக செயலாளர் நவநீதகிருஷ்ணன், நகர்மன்ற தலைவர் சியாமளா நவநீதகிருஷ்ணன் ஏற்பாட்டில் உழைப்பாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை கழக தகவல் தொழில்நுட்ப அணி இணைச் செயலாளர் டாக்டர் ஆர். மகேந்திரன்,தூய்மைபணியாளர் நலவாரிய தலைவர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி வழங்கினர். இதில் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.